RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 146 | ஜூன்.3 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# பயிர்க்கடன் முழு தள்ளுபடியை வலியுறுத்தி தமிழகம் முழுதும் விவசாயிகள் போராட்டம்

சென்னை, ஜூன்.3-

தமிழகத்தில் கூட்டுறவு வங்கியில் விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன் முழுதையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

மேகதாதுவில் அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சியை, தமிழக அரசு தடுத்து நிறுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழகம் முழுதும் பல்வேறு மாவட்ட தலை நகரங்களில், விவசாயிகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பேரணியாக வந்த விவசாயிகள், தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகம் முன், போராட்டம் நடத்த முயன்றனர். அவர்களை போலீசார் கைது செய்ய முயன்ற போது, விவசாய சங்க தலைவர் பழனியப்பன் உள்ளிட்டோருக்கும், போலீசாருக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

போலீசார் ஒருமையில்



விழுப்புரம் நகராட்சி திடலில், விவசாயிகள், கையில் கரும்பை ஏந்தியும், பட்டை நாமம் போட்டுக்கொண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

‘பொய் வாக்குறுதிகள் அளித்து பச்சை துரோகம்‘

தமிழக வெற்றிக் கழக தேர்தல் அறிக்கையில், 5 ஏக்கருக்குள் நிலம் வைத்துள்ள விவசாயிகள், கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும்; 5 ஏக்கருக்கு மேல் வைத்துள்ள விவசாயிகளின் பயிர்க்கடன், 50 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும் என, வாக்குறுதி அளிக்கப்பட்டது.

வாக்குறுதிப்படி, இந்த அரசின் முதல் பட்ஜெட் அறிக்கையிலேயே, விவசாயிகளின் பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்யும் அறிவிப்பை வெளியிட வேண்டும். பொய் வாக்குறுதிகளை வழங்கி, விவசாயிகளுக்கு நம்பிக்கையூட்டி, இப்போது அரைகுறையாக எந்த விவசாயிக்கும் பயனளிக்காத வகையில், பகுதி பயிர்க்கடன் தள்ளுபடி செய்திருப்பது, விவசாயிகளுக்கு இழைக்கப்படும் பச்சை துரோகம்.

தங்கம் தென்னரசு, தி.மு.க., முன்னாள் அமைச்சர்

## கருணாநிதியின் 103வது பிறந்தநாள்: அன்பகத்தில் மூவர் சிலைகளை திறக்கும் மு.க.ஸ்டாலின்!

சென்னை: ஜூன்.3-

கருணாநிதியின் 103 வது பிறந்தநாளையொட்டி, தேனாம்பேட்டை, அன்பகத்தில் 75 அடி உயர கம்பத்தில் திமுக கொடி ஏற்றப்படுகிறது. மேலும் பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோரின் சிலைகளை திமுக தலைவர் ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.



கருணாநிதியின் 103வது பிறந்த நாள் விழாவை திமுகவினர் நாளை கொண்டாடப்பட இருக்கிறார்கள். இந்நாளின் முக்கிய நிகழ்வாக, பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோரின் சிலைகளை திமுக தலைவர் ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

நாளைய தினத்தில் மு.க. ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சிகள்:

8.00 மணி: கருணாநிதி நினைவிடத்தில் மரியாதை

8.15 மணி: சென்னை, அண்ணா சாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கருணாநிதி சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை

8.30 மணி: சென்னை, கோடம்பாக்கம் முரசொலி வளாகத்தில் அமைந்துள்ள கருணாநிதி சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை

8.45 மணி: சென்னை, அண்ணா அறிவாலயத்தில் அமைந்துள்ள கருணாநிதி சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை

9.30 மணி: சென்னை, தேனாம்பேட்டை, அன்பகத்தில் 75 அடி உயர கம்பத்தில் கழகக் கொடி ஏற்றுதல், பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோர் சிலைகள் திறப்பு

## சட்டம் ஒழுங்குக்கு பொறுப்பேற்காமல் நழுவ முயல்வது வெட்கக்கேடு : முதல்வர் மீது இபிஎஸ் சாடல்

சென்னை: ஜூன்.3-

“கடந்த 3 வாரங்களில் எத்தனை ஆளுங்கட்சி நிர்வாகிகள் கொடும் குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்பட்டு உள்ளார்கள்? ஒரு கட்சித் தலைவராக, தன் கட்சியினரை அடக்கி வைக்க வக்கில்லாதவர், எப்படி காவல்துறையை நிர்வகிப்பார்?” என அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், “சென்னை தண்டையார்பேட்டையில் கஞ்சா விற்பனையை தட்டிக் கேட்ட 23 வயது இளைஞர் விஷ்ணு என்பவர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருப்பதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. போதைப் பொருள் புழக்கத்தை தட்டிக் கேட்டால் கொலை தான் இந்த ஆட்சியில் பதிலா? இது தான் மாற்றமா?

இந்த லட்சணத்தில், நேற்று



தன்னால் ஒழிக்க முடியாது என்று மறைமுகமாக ஒப்புதல் வாக்குமூலம் வேறு அளித்துள்ளார்.

மேலும், சிங்கப்பெண் அதிரடிப் படையை அடுத்த வாரம் துவக்கி வைப்பாராம். கடந்த வாரம் அனைத்து ஏற்பாடுகளும் தயாராக இருந்த நிலையில், எதற்கு நீங்கள் கடைசி நிமிடத்தில் ரத்து செய்தீர்கள்?

ஒரு கட்சித் தலைவராகவாவது முறையாக உள்ளாரா என்றால், அதுவும் இல்லை.

தூத்துக்குடி அருகே கூட்டுப் பாலியல் வன்கொடுமை வழக்கில் ஆளுங்கட்சி தவெக நிர்வாகிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வருகின்றன. கடந்த 3 வாரங்களில் எத்தனை ஆளுங்கட்சி நிர்வாகிகள் கொடும் குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்பட்டு உள்ளார்கள்? ஒரு கட்சித் தலைவராக, தன் கட்சியினரை அடக்கி வைக்க வக்கில்லாதவர், எப்படி காவல்துறையை நிர்வகிப்பார்? இப்படிப்பட்ட ஆட்சி எப்படி மக்களைக் காக்கும்? எப்படி பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யும்?

தான் வகிக்கும் பொறுப்பின் தன்மை உணராமல், இன்னும் பஞ்ச் டயலாக் பேசும் ரீல் ஹீரோவாகவே தன்னை பாவித்துக் கொள்ளும் பொய்க்கால் குதிரை அரசின் முதல்வர், அந்த மாய உலகில் இருந்து வெளியே வந்து, தான் வகிக்கும் பொறுப்பின் தலையாயப் பணியான சட்டம் ஒழுங்கைக் காக்கும் பொறுப்பை எடுத்து, நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இளம்பெண்ணுக்கு தவெக நிர்வாகிகள் கூட்டு பாலியல் வன்கொடுமை

### நயினார், அண்ணாமலை கண்டனம்

சென்னை: ஜூன்.3-

வேலை வாங்கித் தருவதாக கூறி இளம் பெண்ணை தவெக நிர்வாகிகள் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்துள்ள சம்பவத்திற்கு எதிராக தமிழக பாஜக முன்னாள், இன்னாள் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.





தமிழக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள பதிவில்: ”தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றி இளம்பெண் ஒருவரை தவெக நிர்வாகிகள் இருவர் கூட்டுப் பாலியல் வன்கொடுமை புரிந்ததாக வெளி வந்துள்ள செய்தி மனதைப் பதைபதைக்கச் செய்கிறது.

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்த கதையாக, லஞ்சம் கேட்பது, மாமூல் கேட்பது போன்ற குற்றங்களில் ஈடுபட்ட தவெகவினர் தற்போது கற்பழிப்பு, கொலை போன்ற கொடூரக் குற்றங்களில் ஈடுபட்டு மக்கள் பாதுகாப்பைச் சூறையாடி வருகின்றனர்.

இந்த லட்சணத்தில், முதல்வர் விஜய் பக்கம் பக்கமாக வசனம் பேசுவதை விடுத்து, முதலில் தான் வகிக்கும் பதவியின் பொறுப்பினை உணர்ந்து, தனது சொந்தக் கட்சியினரிடம் இருந்து தமிழக மக்களைக் காக்க வேண்டும்! அப்பொழுது தான் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீராகும்!” என்று நயினார் கூறியுள்ளார்.

தமிழக பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள பதிவில்: "தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே உள்ள ஆறுமுகமங்கலம் பகுதியைச் சேர்ந்த, தவெக தூத்துக்குடி மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பாலமுருகன் மற்றும் ராமநாதபுரம் பகுதியை சேர்ந்த தவெக நிர்வாகி ஜெயபால் இருவரும் ஸ்ரீவைகுண்டம் பகுதியைச் சேர்ந்த இளம் பெண்ணை வேலை வாங்கி தருவதாகக் கூறி ஏமாற்றி, கூட்டு பாலியல் வன்முறையில் ஈடுபட்டுள்ள செய்தி மிகுந்த அதிரச்சியளிக்கிறது.

பெண்கள் பாதுகாப்பு குறித்துத் தேர்தல் பிரச்சாரத்தின் போது பேசிய தவெக தலைவர் விஜய், தனது கட்சியினரே குற்றச் செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு என்ன பதில் வைத்திருக்கிறார் ? மாற்று அரசியல் என்று கூறி ஆட்சிக்கு வந்த தவெக, இன்று திமுகவின் பாதையிலேயே பயணிக்கிறதா என்ற கேள்வி எழுகிறது.

குற்றவாளிகள் இருவர் மீதும், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மேலும், இது போல பெண்கள் பாதுகாப்பு கவலைக்குள்ளாகும்படியான சம்பவங்கள் நடைபெறாதவாறு, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும், தவெக அரசை வலியுறுத்துகிறேன்” என்று அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

## கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை மறுசீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்: ராமதாஸ்

சென்னை: ஜூன்.3-

தமிழக அரசு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை மீட்டெடுத்து, விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்க அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தவெக அரசை பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளும் லட்சக் கணக்கான கரும்பு விவசாயிகளின் வாழ்வாதாரத்துடன் நேரடியாக தொடர்புடையவை. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் போதிய முதலீடு இல்லாமை, பழைய இயந்திரங்கள், காலிப் பணியிடங்கள், குறைந்த பிழித்திறன் மற்றும் நிர்வாக அலட்சியம் காரணமாக முழுத் திறனுடன் செயல்பட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

இதன் நேரடி பாதிப்பை கரும்பு விவசாயிகளும், ஆலைத் தொழிலாளர்களும் சந்தித்து வருகின்றனர். கரும்புகளை



என்று தமிழ்நாடு உழவர் பேரியக்கத்தின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

தமிழக அரசு தமிழகத்தில் கரும்பு உற்பத்தியை மேம்படுத்த: கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்யப்பட்ட அனைத்து கரும்புகளும் முழுமையாக குறிப்பிட்ட நேரத்தில் வாங்கப்பட வேண்டும். கரும்பு பிழித்திறனை அதிகரிக்க உலகத் தரம் வாய்ந்த நவீன இயந்திரங்கள் மற்றும் தொழில் நுட்பங்கள் நிறுவப்பட வேண்டும்.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் காலியாக உள்ள அனைத்து பணியிடங்களும் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். கரும்பு விவசா

படுத்தியும் கூடுதல் வருவாய் ஈட்டப்பட வேண்டும்.

ஆலைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் பயன் உள்ளூர் மக்களுக்கும், விவசாயிகளுக்கும் கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும். பல ஆண்டுகளாக விவசாய பங்குதாரர்களுக்கு வழங்கப்படாமல் உள்ள லாபப் பங்குகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

கூட்டுறவு ஆலைகளில் ஈட்டப்படும் லாபத்தில் உரிய பங்கை பங்குதார விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் வெளிப்படையாக வழங்க வேண்டும். கரும்பு கொள்முதல் தொகைகள் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் விவசாயிகளுக்கு கட்டாயமாக வழங்கப்பட வேண்டும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் நிர்வாகத்தில் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் வெறும் தொழிற்சாலைகள் அல்ல; அவை கிராமப்புற பொருளாதார வளர்ச்சியின் மையங்களாகும். இந்த ஆலைகளை நவீனமயமாக்குவதன் மூலம் கரும்பு விவசாயிகளின் வருமானம் உயர்வதோடு, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வேலை வாய்ப்பும் பாதுகாக்கப்படும். மேலும், தமிழ்நாட்டின் சர்க்கரை உற்பத்தித் திறன் தேசிய அளவில் முன்னுதாரணமாக மாறும்.

தமிழக அரசு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை மீட்டெடுத்து, விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்க அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு உழவர் பேரியக்கத்தின் சார்பில் வலியுறுத்துகிறேன்” என்று ராமதாஸ் கூறியுள்ளார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

## மாலை தந்தி நாளிதழின் செய்தி எதிரொலி குன்னூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பூட்டி வைக்கப்பட்டிருந்த பொது மக்கள் கழிப்பறை திறக்கப்பட்டது

குன்னூர், ஜூன்.3-

நீலகிரி மாவட்டம் குன்னூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் ரூ.3.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பொது மக்கள் கழிப்பறை பூட்டி வைக்கப்பட்டிருந்த நிலையில்,குன்னூர் வட்டாட்சியர் அலுவலகதிற்கு தினந்தோறும் வரும் வயதானவர்கள் மாற்றுத்திறனாளிகள், உட்பட அனைத்து தரப்பினரும் பாதிக்கபடும் நிலை குறித்து, மாலை தந்தி நாளிதழில் செய்தி வெளியிடபட்டிருந்தநிலையில்,மாலை தந்தி நாளிதழின் செய்தி எதிராலியாக, குன்னூர் வட்டாட்சியர் அலுவலகத்தில், பூட்டி வைக்கபட்ட கழிப்பறை, பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டது.






## கிராண்ட் லைன் ஊராட்சி தொன் போஸ்கோ மெட்ரிக் மேல் நிலைப் பள்ளியில் தற்காப்புக் கலை விழிப்புணர்வு நிகழ்ச்சி

மாதவரம், ஜீன்.3-

மாதவரம் தொகுதி, புழல் ஒன்றியம், கிராண்ட் லைன் ஊராட்சியில் உள்ள தொன்போஸ்கோ மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி வளாகத்தில், _குயின்ஸ் ஆஃப் மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி சார்பில் தற்காப்புக் கலை விழிப்புணர்வு நிகழ்ச்சி குயின்ஸ் ஆஃப் மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமியின் நிறுவனரும் தலைமைப் பயிற்சியாளருமான பி. மகேஷ்குமார் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் சுமார் 200க்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்துகொண்டு, தற்காப்புக் கலையின் நுணுக்கங்களான கராத்தே, சிலம்பம், நுஞ்சக்கு, ஓடு உடைத்தல் மற்றும் தீயைக் கொண்டு நிகழ்த்தப்படும் சாகசங்கள் போன்றவை நடைபெற்றன. பின்னர்

நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக தமிழக வெற்றிக் கழகத்தின் புழல் ஒன்றியச் செயலாளர் மைக்கேல், 29வது வடசென்னை மாவட்ட செயலாளர் கே.வி. பாஸ்கர் மற்றும் பள்ளியின் தாளாளர் ஜான் கிறிஸ்டி ஆகியோர் கலந்துகொண்டு, தற்காப்புக் கலையில் விழிப்புணர்வு ஏற்படுத்திய வீரர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கிப் பாராட்டி வாழ்த்தினார்.இதில் தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகிகள், பெற்றோர்கள் மற்றும் அகாடமியின் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.




■ செங்கல்பட்டு மாவட்டத்தில் 2027மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்வது தொடர்பாக முதல் நாள் பயிற்சி வகுப்பு (02/06/2026) அன்று சீ.பாலச்சந்தர் ஆணையர், தாம்பரம் மாநகராட்சி (மற்றும்) முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர் அவர்கள் தலைமையில் துவங்கியது இப்பயிற்சி வகுப்பில் உதவி இயக்குநர், மக்கள் தொகை கணக்கெடுப்பு, புள்ளியியல் ஆய்வாளர், மக்கள் தொகை கணக்கெடுப்பு, உதவி இயக்குநர் (பயிற்சி), மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் தாம்பரம் மாநகராட்சி, துணை ஆணையர் மற்றும் மண்டல உதவி ஆணையர்கள், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள், உதவியாளர்கள், மற்றும் மக்கள் தொகை தொடர்பான அனைத்து அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

## திமுக மீது பழி போடுவதை நிறுத்திவிட்டு பெண்கள் பாதுகாப்பில் கவனம் செலுத்துங்கள்

### முதல்வர் விஜய்க்கு கனிமொழி வேண்டுகோள்

சென்னை, ஜூன்.03-

திமுக மீது பழி போடுவதை நிறுத்திவிட்டு பெண்கள் பாதுகாப்பில் கவனம் செலுத்துங்கள் என்று முதல்வர் விஜய்க்கு கனிமொழி வேண்டுகேபள் விடுத்துள்ளார். திமுக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி எம்பி தனது சமூக வலைத்தளம் பதிவில் கூறியிருப்பதாவது: திருவைகுண்டம் அருகே பெண் ஒருவர், தவெக நிர்வாகிகள் இருவரால் வேலை வாங்கித் தருவதாக அழைத்துச் செல்லப்பட்டு, மயக்க மருந்து கொடுத்து பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட செய்தி அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது.பெண்கள் பாதுகாப்பு பெரும் கேள்விக்குறியாகியுள்ள இன்றைய சூழலில், தேர்தல் காலத்தைப் போல திமுகவின் மீது பழி போடுவதை நிறுத்திவிட்டு, தாங்கள் தான் ஆளுங்கட்சி என்பதை உணர்ந்து ‘பொறுப்புடன்’ முதல்வர் விஜய் செயல்பட போவது எப்போது. இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது

## தேனிமாவட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 291 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது

தேனி, ஜூன்.3-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 291 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 291 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.அதனைத் தொடர்ந்து, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ரூ.2,03,600/ மதிப்பிலான இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் 2 மாற்றுத்திறனாளிகளுக்கும், ரூ.94,500/ மதிப்பிலான சக்கர நாற்காலி 6 நபர்களுக்கும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் 1 மூலம் தலா ரூ.15,000/ வீதம் 5 முஸ்லிம் ஏழை மகளிர்களுக்கும், கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கம் 1 மூலம் தலா ரூ.15,000/ வீதம் 5 கிறிஸ்துவ ஏழை மகளிர்களுக்கு சுயதொழில் தொடங்க காசோலைகளையும் என மொத்தம் ரூ.4,48,100/ மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை 18 பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது).ராமகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்). கதிர்வேல், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) கவிதா, உதவி ஆணையர் (கலால்) பஞ்சாபகேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் .சுரேஷ்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி காமாட்சி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





## பள்ளி திறப்பை முன்னிட்டு தூய்மைப் பணிகள் தீவிரம்

கிருஷ்ணகிரி, ஜீன்.3-

கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பள்ளிகளில், பள்ளி திறப்பை முன்னிட்டு தூய்மைப்படுத்தும் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. காவேரிப்பட்டினம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கழிவறை, வகுப்பறை மற்றும் பள்ளி வளாகங்களை சுத்தம் செய்யும் பணிகளுடன், பழுதடைந்த கட்டடங்களை புதுப்பிக்கும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. பணிகளை பள்ளியின் தலைமை ஆசிரியர் வேந்தன் ஆய்வு செய்து விரைந்து முடிக்க ஆலோசனை வழங்கினர். பள்ளிகள் ஜூன் 4ஆம் தேதி திறக்கப்படவுள்ள நிலையில், மாணவர்களை வரவேற்க தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.



■ நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணிரு பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பெற்றுக் கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், குன்னூர் சார் ஆட்சியர் ச சங்கீதா உட்பட பலர் உள்ளனர்.

## மாணவர்கள் உயர்கல்வி சம்பந்தமான சந்தேகங்கள் மற்றும் ஆலோசனைகளை பெற இலவச எண்

தேனி. ஜீன்.3-

தேனி மாவட்டத்தைச் சேர்ந்த 12ஆம் வகுப்பு முடித்த மாணவ, மாணவியர்கள் மருத்துவம், பொறியியல், கலை மற்றும் அறிவியல், துணை மருத்துவம் மற்றும் தொழிற்பயிற்சி உள்ளிட்ட உயர்கல்வி படிப்புகள் மற்றும் கல்லூரிகள் தொடர்பான சந்தேகங்கள் குறித்தும், பிற கல்வி உதவித்தொகை தொடர்பான ஆலோசனைகள் மற்றும் சந்தேகங்கள் குறித்து அறிந்து கொள்ளும் வகையில் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உயர்கல்வி வழிகாட்டி கட்டுப்பாட்டு அறை பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ளது. உயர்கல்வி வழிகாட்டி கட்டுப்பாட்டு அறையினை திங்கள் முதல் வெள்ளி வரை (காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை) 82200 77114 என்ற தொலைப்பேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு உயர்கல்வி சம்பந்தமான சந்தேகங்கள் மற்றும் ஆலோசனைகளை பெற்று மாணவ, மாணவியர்கள் பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.




## பொய் சொல்லி ஆட்சிக்கு வந்தது தவெக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி

சென்னை, ஜீன்.3-

பேஸ்புக், இன்ஸ்டாகிராம், வாட்ஸ் ஆப்பில் பொய் சொல்லி தவெக ஆட்சிக்கு வந்துள்ளது. நிறைவேற்ற முடியாத திட்டங்களை சொல்லி தவெக வாக்குகளைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் தற்போது நடக்கும் ஆட்சியின் சங்கதிகளை மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள் என்று முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி கூறியுள்ளார்



## 20 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பெரியாண்டவர்-முனியப்பன் பண்டிகை: கிருஷ்ணகிரியில் பக்தர்கள் திரளாக பங்கேற்பு

கிருஷ்ணகிரி, ஜூன். 03-

குலத்துடையான் மகரிஷி கோத்திரதாரர்கள் சார்பில், 20 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே நடைபெறும் பெரியாண்டவர்ஸ்ரீ முனியப்பன் பண்டிகை மற்றும் காதணி விழா கிருஷ்ணகிரி பழையபேட்டையில் விமரிசையாக நடைபெற்று வருகிறது. கடந்த 1ஆம் தேதி தொடங்கிய இவ்விழாவில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர். விழாவையொட்டி, மலையாண்டள்ளியில் உள்ள குலதெய்வமான அருள்மிகு பூங்காவனத்தம்மனை சிறப்பு வழிபாடுகளுடன் கிருஷ்ணகிரிக்கு ஊர்வலமாக அழைத்து வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து நேற்று காலை 6 மணிக்கு பூங்காவனத்தம்மனுக்கு அபிஷேக பூஜை நடைபெற்றது.பின்னர் காலை 10 மணியளவில் நேதாஜி சாலை விநாயகர் கோவிலில் இருந்து ஏராளமான பெண்கள் பூக்கூடைகள் ஏந்தி ஊர்வலமாக புறப்பட்டனர். சிறப்பு அலங்காரத்தில் பூங்காவனத்தம்மன் நகர் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். மேலும், சிவன்ஸ்ரீ பார்வதி வேடமணிந்த பக்தர்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டு பக்தி பரவசத்தை ஏற்படுத்தினர். மதியம் 1 மணியளவில் பெரியாண்டவருக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. விழாவையொட்டி இன்று (ஜூன் 2) காலை பூங்காவனத்தம்மனுக்கு அபிஷேக பூஜையும், தொடர்ந்து பூக்கூடை ஊர்வலமும் நடைபெறுகிறது. பகல் 1 மணிக்கு முனியப்ப சுவாமிக்கு முப்பூஜை நடைபெற உள்ளது. பின்னர் சுவாமி முன்னிலையில் 100க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு சிகை நீக்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.நாளை (ஜூன் 3) அதிகாலை பூங்காவனத்தம்மனுக்கு அபிஷேக பூஜை நடைபெறுவதுடன், சுவாமி முன்னிலையில் குழந்தைகளுக்கு சிகை நீக்கும் நிகழ்ச்சியும் நடத்தப்படுகிறது. தொடர்ந்து அவரவர் இல்லங்களில் குழந்தைகளுக்கு காதணி விழா நடைபெற உள்ளது. விழாவின் நிறைவு நாளான ஜூன் 4ஆம் தேதி பூங்காவனத்தம்மனுக்கு மஞ்சள் நீராட்டு விழா, அபிஷேக பூஜை உள்ளிட்ட சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. பின்னர் கிருஷ்ணகிரியில் இருந்து பூங்காவனத்தம்மனை ஊர்வலமாக அழைத்து சென்று மலையாண்டள்ளி கோவிலில் சேர்க்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. 20 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே நடைபெறும் இந்த அரிய ஆன்மிக விழாவில் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபட்டு வருகின்றனர்.





## கிருஷ்ணகிரியில் மாவட்ட வீடியோ - போட்டோ ஒளிப்பதிவாளர்கள் சங்க பொதுக்குழு கூட்டம்: நலத்திட்டங்கள் குறித்து மாநில நிர்வாகிகள் விளக்கம்

கிருஷ்ணகிரி, ஜூன்.03-

கிருஷ்ணகிரி மாவட்ட வீடியோ - போட்டோ ஒளிப்பதிவாளர்கள் சங்கத்தின் மாவட்ட பொதுக்குழு கூட்டம் கிருஷ்ணகிரியில் உள்ள தனியார் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் மாவட்டம் முழுவதும் இருந்து சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாக பங்கேற்றனர்.கூட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் ராஜ்குமார் வரவேற்புரை வழங்கினார். மாநில பொதுச் செயலாளர் சுரேஷ் முன்னிலை வகித்தார். தொடர்ந்து மாநில அமைப்பாளர் அசோக், மண்டல செயலாளர் சரத் மற்றும் முன்னாள் மாவட்டத் தலைவர் அசோக் பாபு ஆகியோர் வாழ்த்துரை வழங்கி சங்கத்தின் வளர்ச்சி மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து பேசினர்.மாநில காக்கும் கரங்கள் அறக்கட்டளைத் தலைவர் மற்றும் மாவட்டத் தலைவர் கி..சிவகுமார் தலைமை உரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், “சங்க உறுப்பினர்களின் வாரிசுகளுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் கட்டணமில்லா உயர்கல்வித் திட்டத்தின் மூலம் இந்த ஆண்டு 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் இலவச கல்விச் சேவையை பெற்று வருகின்றனர். மேலும், ‘நலம்’ திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் உள்ள புகைப்படக் கலைஞர்களின் குடும்பத்தினருக்கு உயர்தர மருத்துவ சிகிச்சைகள் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றன. இதனுடன், ‘காக்கும் கரங்கள் குடும்ப நல பாதுகாப்பு நிதி’ உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் மாநில சங்கத்தின் மூலம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன” என்றார். இதனைத் தொடர்ந்து மாவட்ட செயலாளரும் மாநில துணைத் தலைவருமான சக்கரவர்த்தி செயலாளர் அறிக்கையை வாசித்தார். மாவட்ட பொருளாளர் மகபூப் பாஷா கடந்த ஆண்டிற்கான வரவு செலவு மற்றும் நிதி நிலை அறிக்கையை உறுப்பினர்கள் முன் சமர்ப்பித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணைத் தலைவர் சுரேஷ் பவார், கிளைச் சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். முடிவில் மாவட்ட இணைச் செயலாளர் பழனி நன்றி கூறினார். பொதுக்குழு கூட்டத்தில் சங்க வளர்ச்சி, உறுப்பினர்களின் நலன் மற்றும் எதிர்கால செயல்திட்டங்கள் குறித்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பல்லாவரத்தில் 2026 ஆண்டிற்கான யிணிணி மேம்பட்ட தேர்வில் ஸ்ரீ சைதன்யா கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் தேர்வு முடிவுகளில் மீண்டும் சாதனை படைத்தை முன்னிட்டு மாணவர்களை பாராட்டி கௌரவிப்பு விழா நடைபெற்றது

பல்லாவரம், ஜூன்.03-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்தியாவில் உள்ள தெலுங்கானா கர்நாடகா, தமிழ்நாடு, மகாராஷ்டிரா, டெல்லி, ராஞ்சி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் உள்ள ஸ்ரீ சைத்தன்யா கல்வி நிறுவனங்களி மாணவர்கள் யிணிணி மேம்பட்ட தேர்வில் கலந்து கொண்டு அதன் தேர்வு முடிவுகள் ஜீன் 1 ஆம் தேதி வெளியிடப்பட்டது. இதில் சைத்தன்யா பள்ளியை சேர்ந்த 3 மாணவர்கள் சிறந்த மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர். முதல் 10 இடங்கள் பெற்று அகில இந்திய அளவில் ரேங்க்4 மாஸ்டர் மோஹித் சேகர் சுக்லா,






ரேங்க்9 மெடிசெட்டி நாகாசஹர்ஷா, ரேங்க்10 தர்ஷ் சிக்கா, தொடர்ந்து 25 மாணவர்கள் முதல் 100 இடங்களைப் பெற்றனர். ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி மாணவர்கள் தொடர்ந்து சாதனை படைத்து தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.அகில இந்திய ரேங்க் 1000க்குக் கீழ் பெற்றனர்.2026 ல் யிணிணி மேம்பட்ட தேர்வில் கிட்டத்தட்ட 150 மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர். இத்தகைய இமாலய வெற்றியைத் தொடர்ந்து மாணவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.மாணவர்களை கௌரவிக்கும் விதமாக செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் ரேடியல் சாலையில் ஸ்ரீ சைத்தன்யா டெக்னோ பள்ளியில் 2026 ஆண்டிற்க்கான யிணிணி மேம்பட்ட தேர்வில் வெற்றிபெற்று சாதனை படைத்துள்ளர் இந்த வெற்றியைத் தொடர்ந்து மாணவர்களின் பெற்றோர்கள், ஊழியர்கள் மற்றும் நிர்வாகத்தினர் மகிழ்ச்சியடைந்துள்ளனர் இத்தகைய தொடர் மாபெரும் சாதனையை ஸ்ரீ சைதன்யா கல்வி நிறுவனங்களின் இயக்குநர் சுஷ்மா பொப்பனா, இயக்குநர் டி.நாகேந்திரா மற்றும் தமிழ்நாடு மாநில ஒருங்கிணைப்புத் தலைவர் ஹரிபாபு போன்றோர் கேக்வெட்டியும், வெற்றி பெற்ற ஒவ்வொரு மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோரையும் சிறப்பாக வாழ்த்தி தங்களது பாராட்டுகளைத் தெரிவித்தும் 2026 ல் யிணிணி மேம்பட தேர்வில் அவர்கள் பெற்ற வெற்றிக்காக, சிறந்த சாதனையாளர்களையும் பாராட்டி, பூங்கொத்து வழங்கியும், சால்வை அணிவித்து அவர்களின் இதயப்பூர்வமான பாராட்டுகளைத் தெரிவித்தனர்.



## VVPAT இயந்திரங்களில் உள்ள தெர்மல் பேப்பர் ரோல்கள் அகற்றும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு

தேனி, ஜூன்.3-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்பறையில், தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026இல் வாக்குப்பதிவிற்குப் பயன்படுத்தப்பட்ட VVPAT இயந்திரங்களில் உள்ள தெர்மல் பேப்பர் ரோல்கள் அகற்றும் பணிகள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் முன்னிலையில் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026இல் வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை நிறைவடைந்ததைத் தொடர்ந்து, தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு தேர்தலில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள் மற்றும் வாக்களித்ததை உறுதிப்படுத்தும் VVPAT இயந்திரங்கள் அனைத்தும் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பறையில் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளது.இந்நிலையில், தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 இல் வாக்குப்பதிவிற்குப் பயன்படுத்தப்பட்ட VVPAT இயந்திரங்களில் உள்ள தெர்மல் பேப்பர் ரோல்கள் (Thermal Paper Rolls) பாதுகாப்புடன் அகற்ற வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, , தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 இல் வாக்குப்பதிவிற்குப் பயன்படுத்தப்பட்ட VVPAT இயந்திரங்களில் உள்ள தெர்மல் பேப்பர் ரோல்கள் அகற்றும் பணிகள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் முன்னிலையில் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வில், மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள். இராமகிருஷ்ணன் (பொது),காசி (தேர்தல்). கதிர்வேல் (நிலம்), தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) கவிதா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர். ஏ.எடிசன், வட்டாட்சியர்கள்.சுருளி(தேர்தல்), ஜாஹிர் உசேன் (ஆண்டிபட்டி) உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



## கொரட்டூர் இரயில் நிலையம் அருகே 21 கிலோ கஞ்சா கடத்தல்3 பேர் கைது!

மாதவரம், ஜீன்.3-

அம்பத்தூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் ஆய்வாளர் ஜெகநாதன் தலைமையில் மதுவிளக்கு போலீசார் கொரட்டூர் ரயில் நிலையம் அருகே கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோது, அங்கு சந்தேகத்திற்கு இடமாக சுற்றித்திரிந்த தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கோகுல் (25), முத்துக்குமரன் (22), மற்றும் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்தபா (26) ஆகியோரிடம் விசாரணை மேற்கொண்டு, சந்தேகத்தின் பேரில் சோதனை செய்ததில் அவர்களிடமிருந்து 21 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.இதனைத் தொடர்ந்து எதிரிகளிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், விற்பனைக்காக கஞ்சாவை ஆந்திர மாநிலத்தில் இருந்து வாங்கி வந்தது தெரியவந்தது. இதனையடுத்து அம்பத்தூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் வழக்கு பதிவு செய்து, எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



## சென்னையில் உலக புகையிலை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

மாதவரம், ஜீன்.3-

சென்னை புறநகர் இரயில் நிலையத்தில் பிராட்வே பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம் சார்பில் உலக புகையிலை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு புகை மற்றும் போதைப்பொருள் பழக்கங்களிலிருந்து விடுபடுவதற்கான படவிளக்க காட்சியுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சி பிராட்வே கிளை பொறுப்பாளர் பி.கே. கீதா தலைமையில் நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக முத்தையால்பேட்டை கல்வி குழுமம் துரைபாபு, நிலைய அதிகாரி பாண்டியன், ஆர்.பி.எப். இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சினை துவக்கி வைத்தனர்.இந்நிகழ்ச்சியில் ஏராளமான பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயனடைந்தனர்.மேலும் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு மனஅமைதி, உடல் ஆரோக்கியத்தை அளிக்கும் இலவச ராஜயோக தியானத்தையும் கற்றுத் தரப்பட்டது. அதேபோல் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.




## செட்டிநாடு பள்ளி ஊழியர் ரூ.800 கோடி சொத்து குவித்த புகார் குறித்து விசாரணை நடத்த ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூன்.3-

செட்டிநாடு பள்ளி ஊழியர் ரூ.800 கோடி சொத்து குவித்த புகார் குறித்து விசாரணை நடத்த ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. பள்ளி ஊழியர் கருப்பையா அடியாட்கள் மூலம் மிரட்டி ரூ.800 கோடி சொத்துகளை அபகரித்ததாக கைவினைப்பள்ளி சங்கத்தின் உறுப்பினர் பழனியப்பன் வழக்கு தொடர்ந்துள்ளார்




■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 மூன்று நாட்கள் பயிற்சி வகுப்பை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் துவக்கி வைத்து உரையாற்றினார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், ஒசூர் மாநகராட்சி ஆணையாளர் முகம்மது ஷபீர் ஆலம், ஒசூர் சார் ஆட்சியர் ஆக்ரிதி சேத்தி, உதவி வன பாதுகாவலர் திரு.பசவங் சிங், மக்கள் தொகை கணக்கெடுப்பு உதவி இயக்குநர்கள் எஸ்.சஜிலால்,சஜிதா அஸீஸ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) எஸ்.கிருஷ்ணன், உதவி இயக்குநர் (புள்ளியியல்) குப்புசாமி, அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள், வட்டாட்சியர்கள், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## கூடுவாஞ்சேரி அருகே காயரம்பேடு கலிவந்தி பட்டியில் உள்ள ஸ்ரீ அன்பு ஞான யோக தீப மண்டப வளாகத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது

கூடுவாஞ்சேரி, ஜூன்.3-

செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரில் சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கூடுவாஞ்சேரி அருகே காயரம்பேடு கலிவந்தி பட்டியில் உள்ள ஸ்ரீ அன்பு ஞான யோக தீப மண்டப வளாகத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சமூக சிந்தனையாளர் சேலம் ஆர்ஆர் பிரியாணி உரிமையாளர் தமிழ்செல்வன் அவர்கள் கலந்து கொண்டு ஞான தீபம் ஒளி ஏற்றி மாணவ மாணவி மற்றும் பெற்றோர்களுக்கு பரிசு பொருட்களை வழங்கி துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் 200க்கும் மேற்பட்ட பக்தர்கள்






கலந்து கொண்டு அகல் விளக்கை ஏற்றினார். அதனைத்தொடர்ந்து போலீஸ் சூப்பிரண்டு கருணாநிதி அவர்கள் மற்றும் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு தீப ஒளி ஏற்றி பள்ளி மாணவ மாணவிகளுக்கு பேனா பென்சில் போன்ற பரிசு பொருட்கள் வழங்கினார்கள் நிகழ்ச்சி தொடக்கத்தில் மாணவ மாணவிகளின் சிலம்பாட்டம் நடைபெற்றது. மேலும் இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட அப்துல் கலாம் வழியில் சீடரும் நடிகர் தாமு அவர்கள் கலந்துகொண்டு பெற்றோர்களை கொண்டாடுவோம் என்ற சிறப்புரை ஆற்றி மாணவ மாணவிகளுக்கு அறிவுரைகளை வழங்கினார் தொடர்ந்து நிகழ்ச்சியில் மாணவர்களும் பெற்றோர்களும் ஒன்று சேர்ந்து புகையிலை இல்லா தமிழகத்தை படைப்போம் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டு தீப ஒளி ஏற்றினர். வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும் கொல்லிமலை சித்தர் மௌனகுரு அவர்கள் ஆசி வழங்கினார். மேலும் நிகழ்ச்சியில் கழிவந்த பட்டியில் உள்ள சமூக அலுவலர்கள் கல்வியாளர்கள், போலீஸ் அதிகாரிகள் மற்றும் கிராம மக்கள் என பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். மேலும் காவல்துறையில் பணியாற்ற விரும்பும் மாணவ மாணவிகளுக்கு தீப மண்டபத்தில் இலவச பயிற்சி மற்றும் இலவச உணவு தங்குமிடம் கொடுத்து வருகின்றனர். வாராவாரம் முதியோர்களுக்கு இலவச மருத்துவ முகாம் மற்றும் ஆதரவற்றவர்களை பராமரிப்பும் செய்து வருகின்றனர் என்பதை குறிப்பிடத்தக்கது.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை து. ஜா. பால் நல்லதுரைசிறுபான்மைத்துறைமாநில ஒருங்கிணைப்பாளர் மானாமதுரை காங்கிரஸ் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி நேற்று திமுக மாவட்ட செயலாளர் கே ஆர் பெரிய கருப்பன் முன்னிலையில் திமுகவில் தன்னை இணைத்து கொண்டார் இந்நிகழ்ச்சியில் மானாமதுரை நகர மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி திமுக நகர செயலாளர் பொன்னுச்சாமி மாவட்ட துணைச் செயலாளர் சேங்கைமாறன் மானாமதுரை கிழக்கு ஒன்றிய செயலாளர் துரை ராஜா மணி ஆகியோர் உடன் இருந்தனர்




■ ஈஸ்வரன் மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி சார்பாக 60 நாள் சிறப்பு சிலம்பம் மற்றும் கராத்தே பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் நேர்தன், ஈத்தன், பிரணவ் மற்றும் ஜெசிக்கா ஆகியோர் கலந்து கொண்டு, 60 நாள் சிறப்பு பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்தனர். அவர்களின் சிறப்பான பங்கேற்பையும் சாதனையையும் பாராட்டி, ஈஸ்வரன் மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி சார்பாக மாஸ்டர் ஈஸ்வரன் அவர்கள் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார்.






■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் அரங்கில் 46வது மாமன்றக்கூட்டம் மேயர் (பொ) / துணை மேயர்நாகராஜன் தலைமையில் நடைபெற்றது அருகில் ஆணையாளர் (பொ) ஜெய்னுலாப்தீன் , துணை ஆணையாளர் ராஜாராம் , சட்டமன்ற உறுப்பினர்கள் கார்த்திகேயன், கல்லாணை , கோபிசன் தங்கப்பாண்டி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

**உயர்திரு. ஆணையாளர்**
**அவர்கள் திருப்பூர்**
**மாநகராட்சி.**
**ந.க.எண்: எச்1/ 01419 / 2025**

ஆனந்தி (வயது45)
க/பெ.நஞ்சப்பன் (வயது 55)
822/10K,போயம்பாளையம் பிரிவு,
பிச்சம் பாளையம் புதூர்,
P.N.ரோடு,
திருப்பூர் 641601
மனுதாரர்....

அறிவிப்பு

மேற்படி நம்பரில் மனுதாரர் திருமதி ஆனந்தி க/பெ. நஞ்சப்பன் அவர்கள் தமது தந்தை திரு. லிங்கசாமி த/பெ.பழனிச்சாமி அவர்கள் 02.04.2017 அன்று 822/10K போயம்பாளையம் பிரிவு, பிச்சம்பாளையம் புதூர் பி.என்.ரோடு, திருப்பூர் 641601 முகவரியில் இறந்ததை, எதிர்மனுதாரர் அலுவலக இறப்பு பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி உயர்திரு. ஆணையாளர் அவர்கள் திருப்பூர் மாநகராட்சி மனுத்தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் சமூக நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்து கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

**ஆனந்தி**
**மனுதாரர்**

**வருவாய் கோட்டாட்சியர்**
**சிவகங்கை**
**சிவகங்கை மாவட்டம்.**
**ந.க.அ 1/6197/2020**

மனுதாரர்
சாமித்துரை,
த/பெ.சந்தியாகு,
சோமநாதபுரம்,
காளையார்கோவில்,
காளையார்கோவில் வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.
எதிர் மனுதாரர்
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காளையார்கோவில்.

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் சித்தப்பா ஆரோக்கியம் த/பெ சின்னக்கண்ணு என்பவர் கடந்த 13.03.1995 அன்று சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் தாலுகா, மாரந்தை குரூப் கோரவலசை என்ற முகவரியில் உள்ள அவரது வீட்டில் இறந்தார். மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம்.

**நீதிமன்ற உத்தரவுப்படி**
**சாமித்துரை**
**மனுதாரர்**

**வருவாய் கோட்டாட்சியர்**
**சிவகங்கை**
**சிவகங்கை மாவட்டம்.**
**ந.க.அ 1/6192/2020**

மனுதாரர்
சாமித்துரை,
த/பெ.சந்தியாகு,
சோமநாதபுரம்,
காளையார்கோவில்,
காளையார்கோவில் வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.
எதிர் மனுதாரர்
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காளையார்கோவில்.

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் சித்தப்பா மாணிக்க ஆசாரி த/பெ சின்னக்கண்ணு என்பவர் கடந்த 16.08.2008 அன்று சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் தாலுகா, மாரந்தை குரூப் கோரவலசை என்ற முகவரியில் உள்ள அவரது வீட்டில் இறந்தார். மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம்.

**நீதிமன்ற உத்தரவுப்படி**
**சாமித்துரை**
**மனுதாரர்**

# மம்தாவுக்கு எதிராக 50 எம்எல்ஏக்கள் போர்க்கொடி திரிணமூல் காங்கிரஸில் பிளவு

கொல்கத்தா, ஜீன்.3-

“மம்தா பானர்ஜிக்கு எதிராக திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் 50 எம்எல்ஏக்கள் ஒன்றுபட்டுள்ளனர். அவர்கள் சட்டப்பேரவை திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை பெறுவார்கள்'' என்று அக்கட்சியில் இருந்து நீக்கப்பட்ட ரிஜூ தத்தா கூறியுள்ளார். நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் மூன்று முறை தொடர்ந்து ஆட்சியில் இருந்த திரிணமூல் காங்கிரஸை வீழ்த்தி பாஜக ஆட்சியமைத்தது. மேற்கு வங்கத்தில் பாஜக 208 இடங்களில் வென்ற நிலையில், திரிணமூல் காங்கிரஸ் 80 இடங்களை மட்டுமே பிடித்தது. இதனையடுத்து திரிணமூல் காங்கிரஸ் கட்சியில் வெளிப்படையாக பிளவு வெடித்துள்ளது.சமீபத்தில் நடந்த திரிணமூல் காங்கிரஸ் எம்எல்ஏக்கள் கூட்டத்தில் மொத்தமுள்ள 80 பேரில் 61 பேர் கலந்துகொள்ளவில்லை. இதனைத் தொடர்ந்து



திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவராக சோபன் தேப் சட்டோபாத்யாய் தேர்வு செய்யப்பட்டார். ஆனால், அவரை தேர்வு செய்யும் கடிதத்தில் தாங்கள் கையெழுத்து இடவில்லை என்று தெரிவித்த சந்தீபன் சஹா மற்றும் ரிதப்ரதா பானர்ஜி ஆகியோரை அக்கட்சி நீக்கியது. இந்தப் போலி கையெழுத்து விவகாரம் குறித்து மேற்கு வங்க அரசு சிஐடி விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளது. இதுபற்றி பேசிய ரிஜூ தத்தா, “மேற்கு வங்கத்தில் தற்போது மகாராஷ்டிரா பாணி அரசியல் சூழல் நிலவுகிறது. நாங்கள் திரிணமூல் காங்கிரஸ் கட்சியில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கொண்டுள்ளோம். சுமார் 50 எம்எல்ஏக்கள் எங்கள் பக்கம் உள்ளனர். நாங்களே உண்மையான திரிணமூல் காங்கிரஸ் என்பதால், எதிர்க்கட்சித் தலைவராக ரிதப்ரதா பானர்ஜி இருப்பாரே தவிர, சோபன்தேப் சட்டோபாத்யாய் இருக்க மாட்டார். மேலும், அவர்களுக்கு பெரும்பான்மை உள்ளதால், கட்சியின் பெயரையும், சின்னத்தையும் தக்கவைத்துக்கொள்ள அவர்களையே அனுமதிக்க வேண்டும்'' என்றார்.

‘தேர்தல் தோல்விக்குப் பிறகு திரிணமூல் தலைவர்கள் பலர் பாஜகவுக்கு மாறி வருகின்றனர். சிலர் தீவிர அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து வருகின்றனர். முறைகேடுகள் காரணமாக மேற்கு வங்கத்தின் ஃபால்டா தொகுதியில் கடந்த மாதம் 29ம் தேதி மறுவாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த தொகுதியில் திரிணமூல் வேட்பாளராக போட்டியிட்ட ஜஹாங்கீர் கான் கடைசி நேரத்தில் தேர்தல் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.இதேபோல ஏராளமான திரிணமூல் தலைவர்கள் கட்சி நடவடிக்கைகளில் இருந்து விலகி வருகின்றனர். புதிய முதல்வர் சுவேந்து அதிகாரிக்கு சில திரிணமூல் எம்எல்ஏக்கள் பகிரங்கமாகவே ஆதரவு தெரிவித்து உள்ளனர்.

திரிணமூல் எம்பி ககோலி கோஷ் அண்மையில் கட்சியின் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விலகினார். முதல்வர் சுவேந்து அதிகாரியுடன் அவர் நெருக்கமாக உள்ளார். தற்போதைய சூழலில் திரிணமூல் காங்கிரஸுக்கு 28 மக்களவை எம்பிக்கள், 13 மாநிலங்களவை எம்பிக்கள் உள்ளனர். இதில் 20 எம்பிக்கள் பாஜகவுடன் தொடர்பில் இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளதும் கவனிக்கத்தக்கது.

2022 ஆம் ஆண்டில் சிவசேனா கட்சி இரண்டு பிரிவுகளாக உடைந்தது. அதன் விளைவாக அப்போதைய உத்தவ் தாக்கரே தலைமையிலான 'மகா விகாஸ் அகாதி' கூட்டணி அரசு மகாராஷ்டிராவில் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டது. சிவசேனாவின் பெரும்பான்மை எம்எல்ஏக்கள் ஏக்நாத் ஷிண்டே பக்கம் இருந்ததால், பாஜக ஆதரவுடன் அவர் முதல்வரானார். மேலும், கட்சியின் பெயர் மற்றும் சின்னம் ஷிண்டேவுக்கே கிடைத்தது. அதே பாணியில் இப்போது திரிணமூல் காங்கிரஸில் பிளவு ஏற்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# செல்போனில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருந்தபோது இரும்பு நடைபாதை படிக்கட்டு சரிந்து ஜார்க்கண்ட் மாநில தொழிலாளி உயிரிழப்பு

சென்னை, ஜீன்.3-

இரும்பு நடைபாதை படிக்கட்டு சரிந்து விழுந்த விபத்தில் ஜார்க்கண்ட் மாநில தொழிலாளி உயிரிழந்துள்ளார். சென்னை மணப்பாக்கத்தில் உள்ள பிரபலமான கட்டுமான நிறுவனத்தில் வட மாநிலத்தைச் சேர்ந்த ஏராளமானோர் வேலை செய்து வருகின்றனர்.இவர்களில் 50க்கும் மேற்பட்டோர் ராமாபுரம் சாந்தி நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தகர இரும்பு செட்அறையில் தங்கியுள்ளனர்.இவர்களில் 40க்கும் மேற்பட்டோர் நேற்று முன்தினம் இரவு முதல் மாடி இரும்பு படிக்கட்டில் சாய்ந்தபடி ஒரே நேரத்தில் தங்களது செல்போனில் ஐபிஎல் கிரிக்கெட் இறுதிப் போட்டியை நேரலையில் ரசித்துக் கொண்டிருந்தனர்.15 அடி உயரம்அப்போது எதிர்பாராத விதமாக இரும்பு பக்கவாட்டு கம்பி உடைந்தது. இதில், அனைவரும் 15 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்தனர். ஒருவர் மீது மற்றொருவர் விழுந்ததால் பலருக்கு தலை, கை, கால் என உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது.தகவல் அறிந்து நந்தம்பாக்கம் போலீஸார் சம்பவ இடம் விரைந்து காயம் அடைந்த அனைவரையும் மீட்டு கிண்டி மற்றும் போரூரில் உள்ள மருத்துவமனைகளில் சேர்த்தனர்.இவர்களில் ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பிரிஞ்சி மாஞ்சி (31) என்ற தொழிலாளி மட்டும் மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.ஆனால் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார். இந்த விவகாரம் தொடர்பாக நந்தம்பாக்கம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.






# மே மாதத்தில் உச்சம்: யுபிஐ பரிவர்த்தனை ரூ.30 லட்சம் கோடி

புதுடெல்லி, ஜீன்.3-

இந்தியாவில் யுபிஐ பரிவர்த்தனை மதிப்பு மற்றும் எண்ணிக்கை இரண்டிலும் இதுவரை இல்லாத புதிய சாதனையை எட்டி உள்ளது. இதுதொடர்பாக இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் (என்பிசிஐ) நேற்று வெளியிட்ட அறிக்கையில், ‘மே மாதத்தில் யுபிஐ மூலம் ரூ.29.90 கோடி மதிப்பிலான 2,320 கோடி பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டன. இது முந்தைய மாதத்தின் 2,235 கோடி பரிவர்த்தனைகள் மற்றும் ரூ.29.03 லட்சம் கோடி என்ற புள்ளிவிவரங்களை விட அதிகமாகும். கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூ.25.14 லட்சம் கோடி மதிப்பிலான பரிவர்த்தனைகள் நடந்திருக்கின்றன. இத்துடன் ஒப்பிடுகையில் 19 சதவீத வளர்ச்சியை எட்டி உள்ளது. கோடைக்கால சுற்றுலா பயணங்கள், ஐபிஎல் கிரிக்கெட் தொடர் மற்றும் பண்டிகை கால செலவுகள் ஆகியவை பரிவர்த்தனை அதிகரிப்பிற்கு முக்கிய காரணம்’ என கூறப்பட்டுள்ளது

# ‘புது உருட்டாக இருக்கிறது இதெல்லாம்...’ முதல்வர் விஜய் பேச்சுக்கு அதிமுக எதிர்வினை

சென்னை, ஜீன்.3-

‘தான் இருக்கும் பதவிக்கான பொறுப்பை கொஞ்சம் கூட உணராமல், எந்தவொரு தவறுக்கும் பொறுப்பேற்க மனமில்லாமல் ஆச்சரியக்குறித்தனமாக முதல்வர் விஜய் பேசியுள்ளார். உலகமே உங்களை சுற்றி தான் இயங்குவது மாதிரி சும்மா நசநச என்று புலம்பிக்கொண்டு இருக்காதீர்கள் முதல்வர் விஜய்' என அதிமுக தெரிவித்துள்ளது.இது குறித்து அதிமுக ஐடி விங் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘சுயநல தற்பெருமை பேச்சு. இன்றைய முதல்வரின் உரையை குறிப்பிட சரியான வார்த்தை இதுதான். தான் இருக்கும் பதவிக்கான பொறுப்பை கொஞ்சம் கூட உணராமல், எந்தவொரு தவறுக்கும் பொறுப்பேற்க மனமில்லாமல் ஆச்சரியக்குறித்தனமாக பேசியுள்ளார்.சட்டம் ஒழுங்கை சீர்செய்ய காவல்



துறைக்கு அதிகாரிகளை நியமித்துவிட்டால் போதுமா? நிர்வாகம் தானாக செயல்படுமா? என்ன புது உருட்டாக இருக்கிறது இதெல்லாம்?இவர் மீது பழிபோடுகிறார்களாம். தனது ஆட்சியில் இத்தனை குற்றங்கள் நடக்கிறதே, இத்தனை மரணங்கள், பெண்கள் பாதுகாப்பு இல்லையே. இதைப் பற்றியெல்லாம் கொஞ்சம் கூட உங்கள் முகத்திலோ, பேச்சிலோ கவலை, வருத்தம் தெரிந்ததா? இதை சரிசெய்ய வேண்டும் என்ற பொறுப்புணர்வு தெரிந்ததா? இது சுயநல தற்பெருமை இல்லாமல் வேறென்ன ?“எல்லாத்துக்கும் முந்தைய ஆட்சிதான் காரணம்'' என்று சொல்வது பெயர் தான் மாற்றமா? முந்தைய ஆட்சியில் நிதி மோசமாக இருந்ததை இப்போதுதான் கண்டுபிடித்தீர்களா? இதில், இவர் ஆட்சிக்கு வரக்கூடாது என கூட்டு சதி செய்தார்களாம், சூழ்ச்சி செய்தார்களாம். அப்புறம்?கத்தி பேசினால், கத்தி பட டயலாக் மாடுலேசனில் பேசினால், பொய் எல்லாம் உண்மை ஆகி விடுமா? தான் பேசுவதற்கு ஏதாவது ஆதாரத்தை இன்றைய முதல்வர் காட்ட முடியுமா? மாறாக, ஆட்சிக்கு வருவதற்கு முன்னே தவெக நடத்தத் துவங்கிய குதிரை பேரத்துக்கு அவர்கள் வெளியிட்ட அமமுக மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினரின் கையெழுத்து வீடியோவே சாட்சி நம்பர் 1.இவ்வளவு வாய்கிழிய பேசும் மானஸ்தர், அஇஅதிமுக சட்டமன்ற உறுப்பினர்களை அதிகார வலைவீசி விலைபேசி, தலைமைச் செயலகத்தின் கீழ்மாடியில் ராஜினாமா செய்ய வைத்து, மேல்மாடியில் கட்சி இணைப்பு விழா நடத்திய அரசியல் கேவலத்தை (வரப்போகும் வழக்கின் முக்கியமான சாட்சி) பற்றி ஏன் ஒருவார்த்தை கூட பேசவில்லை?எங்களை “மற்றும் பலர்'' என்று வாயளவில் சொல்லும் இவர்கள், அடுத்து இங்கிருந்து யாரை இழுக்கலாம் என்றே மனதளவில் 24 மணிநேரமும் அஇஅதிமுக நினைப்பாகவே இருப்பது ஏன்?ஆனால் ஒன்று. இரண்டே பேருக்கு நடுவில் தான் போட்டியே. எதில் என்றால், மக்களை ஏமாற்றுவதில் தான், கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் இருப்பதில் தவெக திமுகவையே மிஞ்சிதான் இருப்பீர்கள் போல. எல்லோரையும் எல்லா நேரமும் ஏமாற்ற முடியாது என்பதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்.(பி.கு: நீங்க கோட்டு போடுங்கள். போயஸ் கார்டனில் வீடு கூட வாங்குங்கள். யார் கவலைப்பட்டது? உலகமே உங்களை சுற்றி தான் இயங்குவது மாதிரி சும்மா நசநச என்று புலம்பிக்கொண்டு இருக்காதீர்கள் முதல்வர் விஜய்)' எனத் தெரிவித்துள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161